சோலார் மின்சாரம்
கனரக தொழிற்சாலைகள், டையிங், நூல் மில்களுக்கு தேவையான சோலார் மின்சாரம் குறைந்த விலையில் சப்ளை செய்கிறோம்
தொடர்புக்கு
96005 48581

நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" புலனாய்வு நாளிதழ்
www.SAKKRAVIYUGAM.com

TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
Reg.No: 12/2013
தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...
ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
99 44 616 559

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 169 13.12.2025 SATURDAY KARTHIGAI : 26 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 169 13.12.2025 சனிக்கிழமை கார்த்திகை : 26 விலை : ரூ.5/-

3 வரும் டிச.15ம் தேதி தமிழ்நாடு வருகிறார் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா

4 18 ஆண்டுகளுக்கு பிறகு ... அடையாறில் இருந்து மாமல்லபுரம் வரை மின்சார டபுள் டக்கர் பேருந்துக்கான சோதனை ஓட்டம்!

2 நடிப்பாற்றலால் பல தலைமுறைகளை கவர்ந்துள்ளார்: ரஜினிகாந்துக்கு பிரதமர் மோடி பாராட்டு

# 2ம் கட்ட கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட விரிவாக்கம்.. விடுபட்ட மகளிர் வங்கிகளில் ரூ.1000 வரவு!

சென்னை, டிச.13-

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை விரிவாக்க திட்டம் இன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கவுள்ள நிலையில், விடுபட்ட மகளிருக்கு ரூ.1000 இன்றே வங்கி கணக்குகளில் வரவு வைக்கப்பட்டு வருகிறது.

குடும்பத் தலைவிகளுக்கு ரூ.1000 மாதந்தோறும் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படும் என்று 2021ம் ஆண்டு திமுக தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. அதன்படி ஆட்சிக்கு வந்த பிறகு கடந்த 2023 செப்டம்பர் 15 ஆம் தேதி இந்த திட்டத்திற்கு, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் என்று பெயர் வைத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

அதன்படி முதற்கட்டமாக இந்த திட்டத்தில் சுமார் 1,13,75,492 மகளிர் தற்போது வரை பயனடைந்து வருகின்றனர். தகுதியுடைய மகளிர்க்கு மாதந்தோறும் 15ம் தேதியன்று அவரவர் வங்கி கணக்குகளில் ரூ.1000 வரவு வைக்கப்பட்டு வருகிறது.

இந்த சூழலில் தொடர்ந்து கூடுதல் மகளிர் பயனடையும் வகையில், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் விடுபட்டவர்களின் விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டது.



மேலும் அண்மையில் அனைத்து பகுதிகளிலும் தொடங்கப்பட்ட 'உங்களுடன் ஸ்டாலின்' முகாமிலும் இதற்கான விண்ணப்பப்படிவம் வழங்கப்பட்டது.

இப்படியாக விடுபட்ட மகளிரும் பயனடைய வேண்டும் என்று அரசு பல்வேறு வசதிகளை ஏற்படுத்தி கொடுத்த நிலையில், இன்று முதல் விடுபட்ட மகளிரும் இதில் பயனடைகின்றனர். கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட விரிவாக்கத்தை சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில் இன்று மாலை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைக்கிறார்.

அந்த வகையில் விடுபட்ட மகளிருக்கு அவரவர் வங்கி கணக்குகளில் ரூ.1000 செலுத்தும் பணி தொடங்கியுள்ள நிலையில், தற்போதே அனைவரின் வாங்கிக்கணக்கிலும் ரூ.1,000 செலுத்தப்பட்டு வருகிறது.

நேற்று (டிச.12) மாலை சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட விரிவாக்கத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைக்கிறார். அதோடு தமிழ்நாடு அரசின் திட்டங்களின் மூலம் பயனடைந்த பெண்களின் சாதனைகளை வெளிப்படுத்தும் விதமாக 'வெல்லும் தமிழ்ப் பெண்கள்' நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.




## நல்லாறு பாதுகாப்பு இயக்கம் ஆலோசனைக் கூட்டத்தில் சுற்றுச்சூழலியல் எழுத்தாளர் கோவை சதாசிவம் சிறப்புரை

திருப்பூர், டிச.13-

நல்லாறு பாதுகாப்பு இயக்கம் சார்பில் ஆலோசனைக் கூட்டமானது, திருமுருகன் பூண்டி கோனார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. செனியப்பன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சுற்றுச்சூழலியல் எழுத்தாளர் கோவை சதாசிவம் அவர்கள் நல்லாறு வரலாறு சம்பந்தமாக சிறப்புரையாற்றினார். மேலும் பொதுமக்கள் ஆலோசனைகளை வழங்கினார்கள். அடுத்த கட்ட நடவடிக்கையாக நல்லாறு துவங்கும் அன்னூரில் இருந்து நரிய பள்ளி, அவிநாசி திருமுருகன் பூண்டி, ஆத்துப்பாளையம், பிச்சம்பாளையம், நல்லாத்துபாளையம், ஊத்துக்குளி, நஞ் சராயன் குளம் வரை அனைத்து ஊர்களில் உள்ள பொதுமக்களுக்கு விழிப்புணர்வு பிரச்சாரம் செய்வதென தீர்மானித்து, மேலும் மாவட்ட நிர்வாகமும், தமிழக அரசும் உடனடியாக நடவடிக்கை எடுத்து நல்லாறு ஆக்கிரமிப்புகளை அகற்றி தூர்வாரிட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



## திண்டுக்கல் ரெட்டியார்சத்திரம் அட்மா திட்டத்தின் கீழ் தீவனப் பயிர் பயிற்சி

திண்டுக்கல், டிச.13-

திண்டுக்கல் ரெட்டியார்சத்திரம் வட்டாரம் அட்மா திட்டத்தின் கீழ் விவசாய தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தில் ரெட்டியார்சத்திரம் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையத்தில் தீவனப் பயிர் பயிற்சி கால்நடை மருத்துவர் சிவக்குமார் அவர்கள் தலைமையில் வேளாண்மை உதவி இயக்குனர் பழனிச்சாமி அவர்கள் முன்னிலையில் நடத்தப்பட்டது. . இந்த

நிகழ்ச்சியில் பேசிய கால்நடை மருத்துவர் தரமான தீவனப் பயிர் சாகுபடியின் அவசியம், அது மூலம் கால்நடைகளின் ஊட்டச்சத்து மேம்பாடு மற்றும் பால் தரம் உயர்வு பெறப்படும் முறைகள் குறித்து விரிவாக விளக்கினார். மேலும் கால்நடைகளில் ஏற்படும் ப்ளூ டங்க் நோயின் தடுப்பு நடவடிக்கைகள், சராயான நேரத்தில் தடுப்பூசி மற்றும் சரியான மேலாண்மை பற்றி விவசாயிகளுக்கு அறிவுரைகள் வழங்கினார்.

இப் பயிற்சியில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் ஆர்வமாக கலந்து கொண்டு தங்கள் சந்தேகங்களை கேட்டு தெரிந்து கொண்டனர். இப்பயிற்சியில் வணவராயர் வேளாண் கல்லூரி மாணவர்கள தொல்காப்பியன், கிறிஸ்வின், ,மகாவிஷ்ணு ஹரி பிரனேஷ் ,சந்தோஷ் குமார் ,சோமேஸ்வரன் , நவீன்குமார் , ரஞ்சித் அ விஷால் ரோஹித் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டு நேரடி கள அனுபவத்தை பெற்றனர். இந்நிகழ்வில் உதவி வேளாண்மை அலுவலர் முத்துச்சாமி அவர்கள் கலந்து கொண்டு வேளாண்மை துறை சார்ந்த திட்டங்களை கூறி பயன்பெறுமாறு அறிவுறுத்தினார். இந்நிகழ்ச்சி காண ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகன்யா உதவி தொழில்நுட்பம் மேலாளர்கள் பொன் தமிழரசு மற்றும் அருண்குமார் ஆகியோர் சிறப்பாக செய்து கால்நடை ஆரோக்கிய மேம்பாடு மற்றும் தீவனப் பயிர் உற்பத்தி விரிவாக்கத்தை ஊக்குவிக்கும் உறுதிமொழியுடன் சிறப்பாக நிறைவேற்றினர்.

## கொங்குநாடு பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற 66வது குடியரசு தின விழா ஹேண்ட்பால் போட்டியில் மாநில அளவில் சின்னாளபட்டி சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி தங்கப்பதக்கம் வென்றது

### சேரன் பள்ளி தாளாளரும், நிர்வாக அறங்காவலருமான எம்.சிவக்குமார். பள்ளி அறங்காவலரும், முதல்வருமான என்.திலகம் ஆகியோர் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுகளை வழங்கி வாழ்த்தினார்கள்

சின்னாளபட்டி, டிச.13

திருச்சி மாவட்டம், தொட்டியத்தில் உள்ள கொங்குநாடு பொறியியல் கல்லூரியில் பள்ளி கல்வித்துறை சார்பாக நடைபெற்ற 66வது குடியரசு தின விழா ஹேண்ட்பால் போட்டியில் 17 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கான மாநில அளவிலான ஹேண்ட்பால் போட்டியில் சின்னாளபட்டி சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி அணி தங்கப்பதக்கம் வென்றது. இப்பள்ளி தொடர்ந்து 7வது முறையாக மாநில அளவிலான போட்டிகளில் தங்கப் பதக்கம் பெற்றுள்ளது. வெற்றி பெற்ற விழா வீரர்களை சேரன் பள்ளி தாளாளரும், நிர்வாக அறங்காவலருமான எம்.சிவக்குமார். பள்ளி அறங்காவலரும், முதல்வருமான என்.திலகம் ஆகியோர் ஆகியோர் பாராட்டி பரிசுகளை வழங்கி வாழ்த்தினார்கள்.

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி சேரன்வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி கல்வி, விளையாட்டு சாதனைப்படைத்து வரும் பள்ளியாகும். இப்பள்ளியில் பயின்ற மாணவர்கள் ஹேன்ட்பால் போட்டியில் தேசிய அளவில் சாதனை படைத்துள்ளார்கள் இதுதவிர ஹேன்ட்பால் விளையாட்டு போட்டியில் சாதனை படைத்ததால் அரசு பணியிலும், சேர்ந்துள்ளனர். தங்களுக்கு விருப்பமான கல்லூரியிலும் சேர்ந்து படித்தும் வருகின்றனர்.



66வது குடிரரசு தின விழாவை முன்னிட்டு பள்ளித்துறை கல்வித்துறை சார்பாக திருச்சி மாவட்டம், தொட்டியத்தில் உள்ள கொங்குநாடு பொறியியல் கல்லூரியில் 17 வயதிற்குட்பட்ட சீனியர் மாணவர்களுக்கான மாநில அளவிலான ஹேண்ட் பால் போட்டிகள் 03.12.2025 முதல் 08.12.2025 வரை நான்கு சுற்றுகளாக நடைபெற்றது.

முதல் போட்டி தென்காசி மாவட்டத்துடன் நடைபெற்றது. இதில் சேரன் பள்ளி அணி 21 க்கு 10 என்ற புள்ளிக்கணக்கில் தென்காசி மாவட்ட அணியை வீழ்த்தியது. இரண்டாவதாக இராணிப்பேட்டை மாவட்ட அணியுடன் விளையாடி 19க்கு 7 என்ற புள்ளிக்கணக்கிலும். முதல் காலிறுதி போட்டியில் திருவண்ணாமலை மாவட்ட அணியுடன் மோதி 24க்கு 9 என்ற புள்ளிக் கணக்கில் மாபெறும் வெற்றி பெற்றது. அதனைத் தொடர்ந்து, காலிறுதி போட்டியில் மயிலாடுதுறை மாவட்ட ஹேண்ட்பால் அணியுடன் மோதி 31க்கு 13 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதி போட்டியில் நுழைந்தது. அதனைத் தொடர்ந்து விழுப்புரம் விளையாட்டு விடுதி அணி மாணவர் அணியுடன் மோதி 17 க்கு 11 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. இறுதி போட்டியில் சேலம் அணியுடன் மோதி 20க்கு 15 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றி பெற்ற சேரன் பள்ளி அணி மாநில அளவில் முதல்பரிசான தங்கப் பதக்கத்தை வென்று சாதனை படைத்தது.

தொடர்ந்து சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி அணி 17 வயதுக்குட்பட்ட சீனியர் மாணவர்களுக்கான அணியில் ஏழாவது முறையாக தங்கப் பதக்கத்தைப் பெற்று மாபெரும் சாதனை படைத்துள்ளது. வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களை சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் தாளாளரும், சேரன் கல்வி அறக்கட்டளை நிர்வாக அறங்காவலருமான எம்.சிவக்குமார், பள்ளி முதல்வரும், சேரன் கல்வி அறக்கட்டளையின் அறங்காவலருமான என்.திலகம் மற்றும் பள்ளி மேலாளரும், அறங்காவலருமான பா.பாரதிராஜா அறங்காவலர்கள் ஜெ.ஆல்பிரட்எங், எஸ்.அபிஷேக் மற்றும் ஹேண்ட் பயிற்றுனர்கள் என்.அசோக்குமார், டி.செந்தில்குமார், சி.ஆரோக்கிய ரஞ்சனி, மற்றும் உதவித் தலைமையாசிரியை வெண்ணிலா, பள்ளி அலுவலக பணியாளர்கள் மகேஸ்வரி, பிரியா, பள்ளி ஆசிரியைகள் ஆகியோர் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களை வாழ்த்தினார்கள். தொடர்ந்து 7வது முறையாக சேரன் வித்யாலயா மேல்நிலைப்பள்ளி அணி தங்கப் பதக்கம் பெற்றிருப்பது மாணவர்களின் பெற்றோர்களையும், மாணவர்களையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

## காமராஜரை இழிவு படுத்திய யூடியூப்பர் முக்தாரை கண்டித்து களக்காட்டில் ஆர்ப்பாட்டம்

திருநெல்வேலி, டிச.13-

திருநெல்வேலி மாவட்டம் களக்காட்டில் கர்மவீரர் காமராஜர் அவர்களை அவதூறாக பேசிய யூடியுப் முககதாரை கண்டித்தும் அதற்கு துணை போகும் தமிழக அரசை கண்டித்தும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு நாடார் விழிப்புணர்வு பேரவை தலைவர் டாக்டர் சிங்கை முருகன் அவர்கள் தலைமை தாங்கினார். அகில இந்திய காமராஜர் பேரவை தலைவர் துரை அவர்கள் முன்னிலை வகுத்தார். நாடார் விழிப்புணர்வு பேரவை வழிகாட்டு




குழு தலைவர் இரா அச்சுதன் நாடார் அவர்கள் ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்தார். மாநில செயலாளர் ஜெனிஸ் நாடார் வரவேற்புரை ஆற்றினார் நாடார் விழிப்புணர் பேரவை பொதுச் செயலாளர் ஜெயசீலன் ஆர்ப்பாட்டத்தை தொகுத்து வழங்கினார். நாடார் விழிப்புணர்வு பேரவை வழக்கறிஞர் பிரிவு தலைவர் மகேஷ் அவர்களும் புரட்சி பாரதம் மாவட்ட செயலாளர் நெல்சன் அவர்களும் சிறப்பு கண்டன உரையாற்றினர். நாடார் விழிப்புணர்வு பேரவை பொருளாளர் குமார் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து நடத்தினார். நிகழ்ச்சியில் தேசிய நாடார் பேரவை தலைவர் வின்சிலின் நாடார் வணிகர் சங்க மேற்கு மாவட்ட தலைவர் பிராங்கிளின் நாம் தமிழர் கட்சி மாவடி அசோகன் உட்பட பலர் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர் களக்காடு நகர செயலாளர் அசோக் நன்றியுரை கூறினார்.

# இண்டிகோ விமான சேவை முடங்கிய விவகாரம்; 4 அதிகாரிகளை பணிநீக்கம் செய்தது டி.ஜி.சி.ஏ.




புதுடில்லி, டிச.13-

இண்டிகோ விமான சேவைகளை மேற்பார்வையிடும் விமான செயல்பாட்டு ஆய்வாளர்கள் (FOI) 4 பேரை பணிநீக்கம் செய்து சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (டிஜிசிஏ) நடவடிக்கை எடுத்துள்ளது.

மத்திய அரசின் புதிய விதிமுறைகளை புறந்தள்ளிய இண்டிகோ விமான நிறுவனம் கடும் நெருக்கடியில் இருக்கிறது. போதிய விமானிகள் இல்லாத சூழலில், 10 நாட்களுக்கும் மேலாக விமான சேவைகளை இண்டிகோ நிறுவனம் ரத்து செய்து வருகிறது. விமான நிறுவனத்தின் செயல்பாட்டு பிரச்னையால், இண்டிகோவின் 10 சதவீத விமான சேவை குறைக்கப்பட்டுள்ளது.

விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டது தொடர்பாக விமானப் போக்குவரத்து இயக்குநரகம் விசாரணை நடத்தி வருகிறது. இந்த விவகாரம் பார்லிமென்ட் வரை எதிரொலித்தது.

இந்த நிலையில், இண்டிகோ விமான சேவைகளை மேற்பார்வையிடும் விமான செயல்பாட்டு ஆய்வாளர்கள் 4 பேரை பணிநீக்கம் செய்து விமானப் போக்குவரத்து இயக்குநரகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இண்டிகோ விமான சேவைகள் முடங்கிய விவகாரத்தில் தொடர்புடைய விமான செயல்பாட்டு ஆய்வாளர்கள் ரிஷி ராஜ் சாட்டர்ஜி, சீமா ஜாம்னானி, அனில் குமார் போகரியல், பிரியம் கவுசிக், ஆகியோரின் ஒப்பந்தங்களை ரத்து செய்வதாக டிஜிசிஏ அறிக்கை வெளியிட்டுள்ளது.

# இந்தியாவின் அரிசி உற்பத்தி வரலாறு காணாத உச்சத்தை தொடும்!



சென்னை, டிச13-

இந்தியாவின் அரிசி உற்பத்தி வரலாறு காணாத உச்சத்தை தொடும். கோதுமை உற்பத்தியும் அதிகரிக்கும் என அமெரிக்க வேளாண்மைத் துறை கணக்கிட்டுள்ளது.

நடப்பு 202526ம் ஆண்டு பருவத்தில் இந்தியாவின் அரிசி உற்பத்தி 15.2 கோடி டன்களை எட்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதே நேரத்தில் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி குறையும். கடந்த ஆண்டு 4.15 கோடி மெட்ரிக் டன் உற்பத்தியான நிலையில், 4 கோடி மெட்ரிக் டன்னாகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குளிர்கால பயிரான கோதுமையின் உற்பத்தி, கடந்தாண்டு 11.3 கோடி டன் இருந்த நிலையில், 11.7 கோடி டன்னாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விவசாயிகள் டிசம்பர் 5ம் தேதி வரை 2.4 கோடி ஹெக்டேரில் கோதுமை பயிர் செய்துள்ளனர். இது கடந்தாண்டில் 2.1 கோடி ஹெக்டேராக இருந்தது. நெல்லின் சாதனை உற்பத்திக்கு, நடவு செய்யப்பட்ட பரப்பளவு அதிகரிப்பு மற்றும் பருவகால சூழ்நிலைகள் தான் காரணம். பருத்தியை விட அதிக மகசூல் அதிகரித்துள்ளதால், விவசாயிகள் பலர், பருத்தியை கைவிட்டு, நெற்பயிருக்கு மாறியுள்ளனர்.

தென்மேற்கு பருவமழை சாதகமாக இருந்ததாலும், ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் சாதகமான மழை கிடைத்ததாலும், நெல் உற்பத்தி அதிகரித்துள்ளது. எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி 84 லட்சம் ஹெக்டேராக அதிகரித்த போதிலும், உற்பத்தி குறைய வாய்ப்பு உள்ளது. இந்த விவரங்களை அமெரிக்க வேளாண் துறை, செயற்கைக்கோள் ஆய்வு மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்கள் அடிப்படையில் வெளியிட்டுள்ளது.

மத்திய அரசு, காரீப் பருவத்தில் அரிசி உற்பத்தி 12.4 கோடி, டன்களாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது, இது கடந்த ஆண்டின் காரீப் உற்பத்தியை விட 17 லட்சம் டன் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருப்பரங்குன்றம் தீப வழக்கு: ஐகோர்ட் கிளையில் விசாரணை துவக்கம்



மதுரை, டிச13-

திருப்பரங்குன்றம் மலை தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற வேண்டும் என நீதிபதி சுவாமிநாதன் உத்தரவை எதிர்த்த, தமிழக அரசின் மேல்முறையீட்டு மனு மீதான விசாரணைஐகோர்ட் மதுரைக்கிளையில் இரு நீதிபதிகள் அமர்வு முன் தொடங்கியுள்ளது.

'திருப்பரங்குன்றம் மலையில் வழக்கமான இடங்களை தவிர, தீபத்து□ணிலும் டிச., 3ல் கார்த்திகை தீபத்தை சுப்பிரமணியசுவாமி கோவில் நிர்வாகம் ஏற்ற வேண்டும். இந்த ஆண்டு முதல் தீபத்து□ணிலும் கார்த்திகை தீபம் ஏற்றப்படுவதை உறுதி செய்வது போலீசாரின் கடமை' என ஐகோர்ட் மதுரைக்கிளை நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை நிறைவேற்றாததால், 'கலெக்டர் பிரவீன்குமார், போலீஸ் கமிஷனர் லோகநாதன், கோவில் செயல் அலுவலர் யக்ஞநாராயணன் மீது நீதிமன்ற அவமதிப்பின் கீழ் நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும்' என, ராம ரவிக்குமார் மனு தாக்கல் செய்தார்.

மேல்முறையீடு

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், தீபத்துாணில் தீபம் ஏற்றவில்லை. பிற மனுதாரர்கள் உட்பட, 10 பேரை மனுதாரர் அழைத்துச் செல்லலாம். அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க சி.ஐ.எஸ்.எப்., வீரர்களை அனுப்ப உயர்நீதிமன்ற சி.ஐ.எஸ்.எப்., கமாண்டன்டிற்கு உத்தரவிடுகிறேன்' என்றார்.

நீதிபதி சுவாமிநாதன் உத்தரவை எதிர்த்து, ஐகோர்ட் மதுரைக்கிளையில் மேல்முறையீட்டு மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

விசாரணை

இந்த வழக்கில், இன்று (டிச.,12) நீதிபதிகள் ஜி.ஜெயச்சந்திரன் மற்றும் கே.கே.ராமகிருஷ்ணன் ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரணையை தொடங்கியது. போலீஸ் கமிஷனர் தரப்பில் மூத்த வக்கீல் விகாஸ் சிங் ஆஜரானார். தமிழக அரசு சார்பில் அட்வகேட் ஜெனரல் ராமன், வாதங்களை முன் வைத்தார்.

ராமன் வாதத்தில், ''இது ஒன்றும் பொது நல வழக்கு அல்ல. இந்த வழக்கு, அந்த இடத்தில் தீபத்துாண் இருந்ததா என்ற அடிப்படை கேள்வியை எழுப்புகிறது. முதலில் அந்த இடத்தில் தீபத்துாண் இருந்ததா என்பதையும், இரண்டாவதாக, அதில் தீபம் ஏற்றும் சம்பிரதாய நடைமுறையின் அவசியம் குறித்தும் மனுதாரர் உறுதிப்படுத்த வேண்டும்,'' என்றார். பிரிவி கவுன்சில் தீர்ப்பு உட்பட இது தொடர்பான வெவ்வேறு வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்புகளை சுட்டிக்காட்டி அட்வகேட் ஜெனரல் வாதங்களை முன் வைத்தார்.

# தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்த அறிவிப்பு




சென்னை, டிச.13-

மத்திய அரசை கண்டித்து, தொ.மு.ச., சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி., உட்பட, 13 மத்திய தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளன.

அமலில் உள்ள, 29 தொழிலாளர் சட்டங்களை, நான்கு சட்டத் தொகுப்புகளாக மத்திய அரசு உருவாக்கியுள்ளது. கடந்த மாதம் 21 முதல் அமலுக்கு வந்துள்ள இந்த மாற்றத்தை கண்டித்து, 13 தொழிற்சங்கங்கள் சார்பில், கடந்த மாதம் 26ம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இதையடுத்து, அகில இந்திய அளவில் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட தொழிற்சங்கங்கள் முடிவு செய்துள்ளன. அதற்கான அறிவிப்பு, வரும் 22ல் வெளியாக உள்ளதாக, இந்திய நீர் வழி போக்குவரத்து ஊழியர்கள் சம்மேளனத்தின் பொதுச்செயலர் நரேந்திர ராவ் கூறியுள்ளார்.

# நடிப்பாற்றலால் பல தலைமுறைகளை கவர்ந்துள்ளார்: ரஜினிகாந்துக்கு பிரதமர் மோடி பாராட்டு



சென்னை, டிச.13-

நடிகர் ரஜினிகாந்த்துக்கு பிரதமர் மோடி, முதல்வர் ஸ்டாலின் உள்ளிட்டோர் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பிரதமர் மோடி சமூக வலைதளத்தில் தமிழில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: ரஜினிகாந்தின் 75வது பிறந்தநாள் எனும் சிறப்பான தருணத்தில் அவருக்கு வாழ்த்துக்கள். அவரது நடிப்பாற்றல் பல தலைமுறைகளைக் கவர்ந்துள்ளது; பரவலான பாராட்டைப் பெற்றுள்ளது.

அவரது திரையுலகப் படைப்புகள் பல்வேறு பாத்திரங்கள் மற்றும் பாணிகளில் பரவி, தொடர்ச்சியான முத்திரைகளைப் பதித்துள்ளன. திரைப்பட உலகில் அவர் 50 ஆண்டுகளை நிறைவு செய்திருப்பது இந்த ஆண்டின் குறிப்பிடத்தக்க அம்சமாகும். அவரது நீண்டகால, ஆரோக்கியமான வாழ்க்கைக்காகப் பிரார்த்திக்கிறேன். இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.

கள்ளம் கபடமற்ற...!

முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட அறிக்கை: ரஜினிகாந்த் வயதை வென்ற வசீகரம்.

மேடையில் ஏறினால் அனைவரையும் மகிழ்விக்கும் சொல்வன்மை. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத கள்ளம் கபடமற்ற நெஞ்சம்.

ஆறிலிருந்து அறுபதுவரைக்கும் அரைநூற்றாண்டாகக் கவர்ந்திழுக்கும் என் நண்பர் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்துக்கு உளம் நிறைந்த பிறந்தநாள் வாழ்த்துக்கள்.

மென்மேலும் பல வெற்றிப் படைப்புகளை அளித்து, மக்களின் அன்போடும் ஆதரவோடும் தங்கள் வெற்றிக்கொடி தொடர்ந்து பறக்கட்டும். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

அதிமுக பொதுச்செயலாளர், இபிஎஸ்

தமிழ்த் திரையுலகின் அசைக்க முடியாத பேராளுமையாக 50 ஆண்டுகளாக கோலோச்சி வரும் சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்துக்கு எனது இதயங்கனிந்த பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள். திரையரங்குகளை திருவிழாக் கூடங்களாக மாற்றவல்ல தங்களின் ஸ்டைலில் மெஜிக் ரசிகர்களை மகிழ்விக்கட்டும் பல்லாண்டு.

தமிழக பாஜ முன்னாள் தலைவர், அண்ணாமலை

இன்று 75வது பிறந்த நாள் கொண்டாடும், அன்புக்கும் மரியாதைக்கும் உரிய, சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்துக்கு, இனிய பிறந்த நாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். எளிய பின்னணியில் இருந்து வந்து, தனது கடும் உழைப்பாலும், மேன்மையான பண்புகளாலும், ஐம்பது ஆண்டுகளாக, இந்தியத் திரையுலகின் உச்சத்தில் இருப்பவர்.

பெரியவர்கள் முதல் குழந்தைகள் வரை, மூன்று தலைமுறைகளை தனது வசீகரத்தால் ஈர்த்திருப்பவர். சிறந்த தேசியவாதியும், பண்பாளருமான சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், மேலும் பல்லாண்டுகள் நலமுடன், ஆரோக்கியத்துடன் வாழ, இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.

தமிழக பாஜ தலைவர், நயினார் நாகேந்திரன்

தமிழ் திரையுலகின் மார்க்கண்டேயன்; மூன்று தலைமுறைகளை ஆக்கிரமித்தவர்; திரையுலக வானில் நட்சத்திரமாக மிளிர்பவர்; 50 ஆண்டுகளாக மக்களின் இதயங்களில் ஆதர்ச நாயகனாக கோலோச்சி வரும் சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்துக்கு எனது இதயம் கனிந்த பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்.

மேலும் பல ஆண்டுகள் நல்ல ஆரோக்கியத்துடன் நீண்ட ஆயுள் பெற்று திரையுலகில் பல சாதனைகளைப் படைக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக்கொள்கிறேன்.

நடிகர் கமல்ஹாசன்

75 வருட வாழ்க்கையில், 50 ஆண்டு கால சினிமா. வாழ்த்துக்கள் நண்பா.

# அமெரிக்கா மிரட்டல் எதிரொலி; நவம்பரில் ரஷ்ய எண்ணெய் ஏற்றுமதி வீழ்ச்சி




மாஸ்கோ, டிச.13-

அமெரிக்காவின் வரி விதிப்பு மிரட்டலால், நவம்பர் மாதத்தில் ரஷ்யாவின் எண்ணெய் ஏற்றுமதி வீழ்ச்சியை சந்தித்துள்ளதாக சர்வதேச எரிசக்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

எண்ணெய் ஏற்றுமதி செய்யும் முன்னணி நாடுகளில் ஒன்றாக ரஷ்யா திகழ்ந்து வருகிறது. பிற நாடுகளைக் காட்டிலும், விலை குறைவு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் ரஷ்யாவிடம் எண்ணெய் கொள்முதல் செய்ய உலக நாடுகள் போட்டி போட்டு வந்தன. ஆனால், உக்ரைன் போர் விவகாரத்தில் மத்தியஸ்தம் செய்து வரும் அமெரிக்கா, ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் கொள்முதல் செய்யும் இந்தியா போன்ற நாடுகளுக்கு கூடுதல் வரிகளை விதித்தார். மேலும், பல்வேறு நடவடிக்கைகளையும் எடுப்பேன் என்று டிரம்ப் மிரட்டல் விடுத்திருந்தார்.

இந்த நிலையில், நவம்பர் மாதத்தில் ரஷ்யாவின் எண்ணெய் ஏற்றுமதி வீழ்ச்சியை சந்தித்துள்ளதாக சர்வதேச எரிசக்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. அதாவது, நாளொன்றுக்கு 4 லட்சத்து 20 ஆயிரம் பீப்பாய்கள் குறைந்து, 69 லட்சம் பீப்பாய்கள் விற்கப்பட்டு வருகின்றன. இதன்காரணமாக, ரஷ்யாவின் எண்ணெய் வருவாய், நவம்பர் மாதத்தில் 99 ஆயிரம் கோடி ரூபாயாக குறைந்துள்ளது. இது கடந்த ஆண்டு நவம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் 32 ஆயிரம் கோடி ரூபாய் குறைவாகும்.

வரிவிதிப்புகள், தடைகள் போன்ற அமெரிக்காவின் மிரட்டல்களால் ரஷ்யா எண்ணெய் கொள்முதலில் பிற நாடுகள் ஆர்வம் காட்டவில்லை என்று சர்வதேச எரிசக்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து ரஷ்ய நிதியமைச்சகம் கூறுகையில், 'இந்த ஆண்டின் முதல் 9 மாதங்களில் எண்ணெய் மற்றும் எரிவாயு வருவாய் 22 சதவீதம் குறைந்துள்ளது. இதன் மொத்த மதிப்பு 88 பில்லியன் டாலர்களாக பதிவாகியுள்ளது,' என தெரிவித்துள்ளது.

உக்ரைனுடனான போர் துவங்கிய பிறகு, ரஷ்யாவின் எண்ணெய் விற்பனையில் மிகப்பெரிய அடி விழுந்தது இதுவே முதல்முறையாகும்.



# நீதிபதிக்கு ஆதரவாக வக்கீல்கள் ஆர்ப்பாட்டம்

சென்னை, டிச.13-

உயர் நீதிமன்ற மதுரை கிளை நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனை பதவி நீக்க கோரும் தீர்மான நோட்டீசை ரத்து செய்ய கோரி, சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் மலை மீது, தீபத்து□ணில் தீபம் ஏற்ற, நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் உத்தரவு பிறப்பித்தார்.

இதை அரசியலாக்க முயற்சிகள் நடப்பதாகவும், அதை கண்டிக்கும் விதமாகவும், நேர் சிந்தனை வழக்கறிஞர்கள் சங்கத்தினர், சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் பங்கேற்றவர்கள் பேசுகையில், 'நீதிபதி பிறப்பித்த தீர்ப்பை அரசியலாக்கி, மத அரசியலுக்கு, தி.மு.க., வித்திடுகிறது.

'நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனை, பதவி நீக்கம் செய்யும், தீர்மான நோட்டீசை, திரும்பப் பெற வேண்டும். இல்லையெனில், மாநிலம் முழுதும், தொடர் போராட்டங்கள் நடத்தப்படும்' என்றனர்.

# டிச.,18ம் தேதி ஈரோட்டில் தவெக தலைவர் விஜய் பிரசாரம்; செங்கோட்டையன் தகவல்




ஈரோடு, டிச.13-

வரும் டிசம்பர் 18ம் தேதி ஈரோட்டில் நடக்கும் பொதுக்கூட்டத்தில் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் கலந்து கொள்ள இருப்பதாக அக்கட்சியின் மேற்கு மண்டல பொறுப்பாளர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

அவர் பேசியதாவது; வரும் 18ம் தேதி தவெக தலைவர் விஜய் ஈரோடு வருகிறார். காலை 11 மணியில் இருந்து 1 மணி வரை நிகழ்ச்சி நடைபெறும். அதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறோம். அரசு அதிகாரிகள் ஆலோசனைகளைக் கேட்டு இந்த நிகழ்ச்சியை நடத்த இருக்கிறோம். புதுச்சேரிக்குப் பிறகு, முதல்முறையாக தமிழகத்தில் பிரசாரம் செய்ய இருக்கிறார். விஜய் தான் வரும் கால முதல்வர் என்பதை ஏற்றுக்கொண்டு, கட்சியில் இணைய வருபவர்களை வரவேற்போம் உள்ளிட்ட 4 தீர்மானங்கள் நேற்றைய கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. கூட்டணியில் யாரை வைக்க வேண்டும் என்பதை தலைவர் முடிவு செய்வார். நேற்றைய கூட்டத்தில் தவெகவில் பல பேர் இணையும் வாய்ப்பு இருக்கிறது என்று தான் சொன்னேன். தவெக அதிமுகவாக மாறும் என்று நான் சொல்லவில்லை. அனைவரையும் இணைப்போம், அனைவரும் ஒற்றுமையாக இருப்போம்.

அதிமுகவில் இருந்து தன்னை நீக்கியதை எதிர்த்து தொடர்ந்த வழக்கு நிலுவையில் இருக்கிறது. அது தனி. இப்போது நான் விருப்பப்பட்டு, தவெகவில் இணைந்து விட்டேன். எம்ஜிஆர் காலத்திலேயே உயர்மட்ட குழு வரையில் இருந்தவன். புதிதாக வந்தவர்கள் என்னை உறுப்பினராக நீக்க முடியாது. என்னை அரவணைத்து செல்லும் இயக்கத்தில் சேர்ந்ததில் எந்த தவறும் இல்லை.

எம்ஜிஆர், ஜெயலலிதா இருந்த போது அதிமுகவில் எப்படி இருந்தனோ, அது போன்று தான் தவெகவில் தற்போது இருக்கிறேன், இவ்வாறு அவர் கூறினார்.




# போக்குவரத்து கழகத்தில் 100 பஸ்களை ஓரங்கட்ட முடிவு

சென்னை, டிச.13-

'தமிழக அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்தில், 100 பழைய பஸ்களை கைவிட முடிவு செய்யப்பட்டுள்ளது' என, போக்குவரத்துக் கழக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமிழக அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் சார்பில், சென்னை, திருச்சி, திருநெல்வேலி, மதுரை, கோவை, திருப்பதி, பெங்களூரு உள்ளிட்ட இடங்களில் இருந்து, தினமும் 1,080க்கும் மேற்பட்ட, டீலக்ஸ், 'ஏசி' வசதியுள்ள விரைவு பஸ்கள் இயக்கப்படுகின்றன.

தினமும் ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் பயணம் செய்து வருகின்றனர். அடுத்த ஒரு மாதத்தில், 20 வால்வோ பஸ்கள் உட்பட, 240 புதிய பஸ்கள், புதிதாக இணைக்கப்பட உள்ளன.

இதற்கிடையே, தென்மாவட்டங்களுக்கு செல்லும் விரைவு பஸ்களில், மிகவும் பழமையான பஸ்களை கைவிட முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பட்டியல் தயார் செய்யப் படுகிறது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் புதிய பல திட்டங்களை அறிமுகப்படுத்தி மகளிர் சமுதாயத்தை உயர்த்தி வருகிறார்கள்!

சென்னை, டிச.13-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திராவிட மாடல் ஆட்சி பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாகவும், சுடர்விடும் ஒளிவிளக்காகவும் திகழ்கிறது! மகளிர்க்கு மாதம் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை/ விரிவாக்கம்! மகளிர் சுய உதவிக் குழுக்கள்! வாழ்வில் பொருளாதார ஏற்றம் காண விடியல் பயணத்திட்டம்! பணிபுரியும் பெண்களுக்குத் தோழி விடுதிகள்! அறநிலையத்துறையில் பெண் ஓதுவார்கள்! பெண் பத்திரிகையாளர்களுக்கு கலை வித்தகர் விருது! தொழில் முனைவோராக பெண்கள்! காவல்துறை மகளிர்க்கு சலுகைகள்! உள்ளாட்சி அமைப்புகளில் மகளிர்க்கு 50 விழுக்காடு இடஒதுக்கீடு! பெண்கல்வியை உயர்த்திடும் புதுமைப் பெண் திட்டம்! அரசு ஊழியர்கள்/ ஆசிரியர்களுக்கு மகப்பேறு விடுப்பு! 12 மாதங்களாக உயர்வு! சிப்காட் தொழில் வளாகங்களில் குழந்தைகள் காப்பகங்கள்! போன்ற எண்ணற்ற மகளிர் திட்டங்களால் ஒளிரும் தமிழ்நாடு!

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2021இல் ஆட்சிப் பொறுப்பேற்றபின் மகளிர் சமுதாய மேம்பாட்டிற்குப் புரட்சிகரமான புதிய LIGU திட்டங்களை அறிமுகப்படுத்தி மகளிர் சமுதாயத்தை உயர்த்தி வருகிறார்கள்.

தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை 2024; சமூகத்தில் பெண்களுக்கான சமூகநீதி மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்திடும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் "தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை" 2024 ஐ முதலமைச்சர் அவர்கள் 21.2.2024 அன்று வெளியிட்டு மகளிர் உரிமைக்கு வழிவகுத்துள்ளார்கள். முதலமைச்சர் விடியல் பேருந்து திட்டம்; தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை மட்டுமல்ல. தமிழ்நாடு முழுவதிலும் அரசுப் பேருந்துகளில் பெண்களுக்குக் கட்டணமில்லா பயண வசதி வழங்கும் விடியல் பயணத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி ஒரு நாளைக்கு ஏறத்தாழ 60 இலட்சம் மகளிர் பயன் பெறுகின்றனர். இத்திட்டத்தின் மூலம் மகளிர் மாதம் ஒன்றுக்கு ஏறத்தாழ 1000 ரூபாய் வரை வாய்ப்பைப் பெற்று மகிழ்கின்றனர். கலைஞர் மகளிர் உரிமைத் தொகை; ஏழை மக்களின் குடும்பங்களிலும், கிராமப் பொருளாதாரத்தைச் சுமக்கும் முதுகெலும்பாகப் திகழும் மகளிர்க்கு மாதம் 1000 ரூபாய் வழங்கும் மகளிர் உரிமைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி இதுவரை 1 கோடியே 14 இலட்சம் மகளிர் மாதம் தோறும் 1000 ரூபாயை வங்கி கணக்குகளில் நேரடியாகப் பெற்று தன்னம்பிக்கை உணர்வில் திளைக்கிறார்கள்.

புதுமைப் பெண் திட்டம்; முதலமைச்சர் ஒரு புரட்சிகரமான திட்டம் இது. 6ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்புவரை அரசுப் பள்ளிகளிலும், அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் தமிழ்வழியிலும் பயின்று உயர்கல்வியில் சேரும் மாணவியர்க்கு படிப்பு முடியும் வரை மாதம் 1000 ரூபாய் வழங்கும் புதுமைப் பெண் திட்டத்தை நடைமுறைப்படுத்தி கல்லூரி வாசலையே தொட்டுப் பார்க்காத குடும்பங்களில் இருந்து பெண்கள் கல்லூரியில் சேர்ந்து படிக்கும் அருமையான வாய்ப்பை உருவாக்கித் தந்துள்ளார்கள். பணிபுரியும் மகளிருக்கு "தோழி விடுதிகள்"; மகளிர் படித்து முடித்துச் சொந்த ஊரை விட்டுவந்து வெளியூரில் தங்கிப் பணிபுரிவதில் பல இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. இதைக் களையும் நோக்கில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பணிபுரியும் மகளிர்க்காக, சேலம், தஞ்சாவூர் உட்பட முக்கிய நகரங்களில் எல்லாம் உருவாக்கியுள்ள அருமையான திட்டம் தோழி விடுதிகள் திட்டம். இதன் மூலம் பணிபுரியும் மகளிர் பாதுகாப்புடன் பணிபுரிகின்றனர். மகளிர் சுய உதவிக்குழு கடன்கள் ரத்து; கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழுக் கடன்களில் 31.3.2021 அன்றைய தேதியில் நிலுவையில் இருந்த கடன் தொகை ரூ.2,755.99 கோடி தள்ளுபடி செய்யப்பட்டது. 1,17,617 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 15,88,309 மகளிர் பயன்பெற்றுள்ளனர். மகப்பேறு விடுப்பு உயர்வு; அரசுப் அலுவகங்களில் பணி புரியும் மகளிர் ஆசிரியைகளின் மகப்பேறு விடுப்பு 9 மாதம் என்பது 12 மாதங்களாக 2021ஆம் ஆண்டு முதல் உயர்த்தி வழங்கப்படுகிறது.




மகளிர் சுய உதவிக்குழு கடன் உச்சவரம்பு அதிகரிப்பு; திராவிட நாயகர் அவர்கள் ஆட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கிடும் கடன் உச்ச வரம்பை ரூ.12 இலட்சம் என்பதில் இருந்து ரூ.20 இலட்சமாக உயர்த்தி உத்தரவிட்டார்கள். 2016 முதல் 2020 வரை நான்கு ஆண்டுகளில் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடன் ரூ.39,468.88 கோடி. ஆனால் திராவிட மாடல் ஆட்சியில் 2021 முதல் 2025 வரை வழங்கப்பட்டுள்ள கடன் ரூ. 1,12,299 கோடி சத்துணவுத் திட்ட மகளிர் மேம்பாட்டில் திராவிட நாயகர்; சத்துணவு மையங்களில் பணிபுரியும் சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்க்கான ஓய்வு வயதினை 58லிருந்து 60 ஆக உயர்த்தி, அவர்கள் வாழ்வில் மகிழ்ச்சி ஏற்படுத்தியுள்ளார். தொழில் முனைவோராக மகளிர்; பெண்கள் கல்வியோடு நின்றிடாமல் அவர்களுக்குத் தாமே சுயமாகத் தொழில் தொடங்கும் வாய்ப்பையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். Start Up எனப்படும் புத்தொழிலை ஊக்குவிப்பதற்காக தமிழ்நாடு அரசாங்கம் மானிய நிதி அளிக்கும் TANSEED (Tamil Nadu Startup Seed Grand Fund) என்கிற திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் வாயிலாக, பெண் தொழில் முனைவோர் தொடங்கும் புத்தொழில்களுக்கு 15 இலட்சம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படுகிறது. இதன் காரணமாக, இந்திய அளவில் தொழிற்சாலையில் பணிபுரியும் மகளிரில் 41 சதவீதம் மகளிர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று ஒன்றிய அரசு அறிவித்துப் பாராட்டியுள்ளது.

காவல்துறை மகளிர்க்கு சலுகைகள்; பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க 39 புதிய மகளிர் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பெண் காவலர்கள். முக்கியப் பிரமுகர்களின் வருகையின்போது வீதிகளில் நீண்ட நேரம் நிற்கவைப்பதைத் தடுத்து, அவர்களுக்கு இலகுவான பணிகள் வழங்க ஆணையிட்டு, அவ்வாறே வழங்கப்படுகிறது. கலைத்துறை, பத்திரிகை துறைகளில் சிறந்த மகளிர்க்கு கலைத்துறை வித்தகர்விருதுகள்; தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டினை முன்னிட்டு 2024 ஆம் ஆண்டில் மட்டும் மகளிர்க்கான கலைத்துறை வித்தகர் சிறப்பு விருது பழம்பெரும் திரையுலகப் பின்னணிப் பாடகி திருமதி பி.சுசீலா அவர்களுக்கு வழங்கப்பட்டது. அதேபோல சிறந்த மகளிர் பத்திரிகையாளர்க்கும் சிறப்பு விருதாக கலைஞர் எழுதுகோல் விருது அறிவிக்கப்பட்டு திருமதி சுகிர்தா சாரங்கராஜ் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அறநிலையத் துறையில் பெண் ஓதுவார்கள்; திருக்கோவில்களில் அனைத்துச் சாதியாரும் அர்ச்சகர் திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்ற 11 பெண்கள் திருக்கோவில்களில் பெண் ஓதுவார்களாகப் பணி அமர்த்தப்பட்டுள்ளனர். உள்ளாட்சி அமைப்புகளில் மகளிர்க்கு இடஒதுக்கீடு உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு 1996 வழங்கப்பட்டது. பின்னர் 50 சதவீதமாக உயர்த்தப்பட்டு, இலட்சக்கணக்கான மகளிர் உள்ளாட்சி நிறுவனங்களில் பதவிப் பொறுப்புகள் பெற்றுத் தமிழ்நாட்டு முன்னேற்றத்திற்குப் பாடுபடுகின்றனர். இன்று 21 மாநகராட்சிகளின் மேயர்களில் 11 மகளிர் பெண் மேயர்களாக விளங்குவது தமிழ்நாட்டிற்குரிய தனிச் சிறப்பாகும்.

சிப்காட் தொழில் வளாகங்களில் குழந்தைகள் காப்பகங்கள்; தொழிற்சாலைகளில் வேலைக்குச் செல்லும் பெண்கள் தங்கள் குழந்தைகளை குழந்தைகள் பாதுகாப்பகங்களில் விட்டுவிட்டு கவலையின்றி தொழிற்சாலைகளில் வேலை செய்வதற்காக 17 சிப்காட் நிறுவனங்களில் குழந்தைகள் காப்பகங்களை ஏற்படுத்தினார்கள். இக்காப்பகங்களில் ஏறத்தாழ 3 இலட்சத்து 23 ஆயிரம் தொழிலாளர்கள் பயன்பெறுகின்றார்கள். இப்படி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திராவிட மாடல் அரசில் புதியபுதிய திட்டங்கள் நிறைவேற்றி மகளிர் நலன்களை மேம்படுத்துவதில் தமிழ்நாடு இந்தியாவிற்கே வழிகாட்டி வருகிறது என்பதை வரலாறு போற்றுகிறது.

கலைஞர் மகளிர் உரிமைத்திட்ட விரிவாக்கம்; இப்படி பெண்கள் முன்னேற்றத்திற்காக தொடர்ந்து பல திட்டங்களை நிறைவேற்றி வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாலை சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெறும் துறைகள் தோறும் சாதனைகள் படைத்து வெல்லும் தமிழ்ப் பெண்களைச் சிறப்பிக்கும் மாபெரும் விழாவில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் இதுவரை பயன்பெறாதவர்களும் பயன்பெற்று மாதம் 1000 ரூபாய் பெற கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தை விரிவுபடுத்தி வழங்குகிறார்கள். இதே நேரத்தில் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் அமைச்சர் பெருமக்கள் பங்குகொண்டு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் இலட்சக்கணக்கான மகளிர்க்கு நேரடியாக வங்கி கணக்குகளில் 1000 ரூபாயைச் செலுத்தும் விரிவாக்கத் திட்டத்தை தொடங்குகிறார்கள்.



## மதிதா பள்ளியில் பாரதியார் பிறந்தநாள் விழா படிப்பில் மட்டும் கவனம் செலுத்தி மாணவர்கள் உயர்பதவிக்கு வர வேண்டும்

நெல்லை, டிச.13-

மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தி உயர் பதவிகளில் வந்து சாதிக்க வேண்டும் என நெல்லை சந்திப்பு மதிதா இந்துக் கல்லூரி மேல்நிலைப் பள்ளியில் நடந்த பாரதியார் பிறந்த நாள் பங்கேற்றுப் பேசிய மாநகர போலீஸ் துணை கமிஷனர் பிரசண்ண குமார் கேட்டுக்கொண்டார்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பிறந்தநாள் விழா நெல்லை சந்திப்பில் உள்ள மதிதா இந்துக்கல்லூரி மேல்நிலைப் பள்ளியில் நேற்று காலை நடந்தது.

நிகழ்ச்சியில் அவர் படித்த வகுப்பறையில் உள்ள பாரதி சிலைக்கு நெல்லை மாநகர போலீஸ் துணை கமிஷனர் பிரசண்ண குமார் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதையொட்டி பாரதி படித்த வகுப்பறையில் பாரதி பாடல்களை மாணவிகள் பாடி மரியாதை செலுத்தினர். நிகழ்வுக்கு பள்ளிச் செயலாளர் சண்முகம் தலைமை வகித்தார்.

தலைமை ஆசிரியர் சோமசுந்தரம் வரவேற்றார். இதையடுத்து பாரதியார் சிலைக்கு ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் உள்ளிட்ட ஏராளமானோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இதைத்தொடர்ந்து பாரதியார் பிறந்த நாளை முன்னிட்டு பள்ளியில் நடத்தப்பட்ட ஓவியப்போட்டி, கட்டுரை போட்டி, பேச்சு போட்டிகளில் வெற்றிபெற்று முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ மாணவிகளுக்கு துணை கமிஷனர் பிரசண்ண குமார் பதக்கம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கிப் பாராட்டிப் பேசினார்.

அப்போது அவர் கூறுகையில் ‘‘மாணவர்கள் படிக்கும் காலத்தில் படிப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஜாதி, மதங்களை கடந்து நன்றாக படித்து உயர் பதவிகளில் வந்து சாதிக்க வேண்டும். இதுதான் பெற்றோர்களுக்கு பெருமை சேர்க்கும். படிப்பு தான் ஒரு மனிதனை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லும்.

வரும் காலம் வளமாக அமைய மாணவர்கள் படிப்பில் மட்டுமே தனது முழு கவனத்தை செலுத்த வேண்டும். பாரதி படித்த வகுப்பறை இங்கு உள்ளது. இங்கு படிப்பவர்கள் நல்ல நிலைமைக்கு வருவார்கள்’’ என்றார்.

இதைத்தொடர்ந்து மாணவ மாணவிகள், ஆசிரியர்களுடன் சேர்ந்து விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்றார். நிகழ்வில் ஆசிரியர்கள் சொக்கலிங்கம், பாலசுப்பிரமணியன், முத்துராமன் மற்றும் மாணவமாணவிகள் என ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

## மக்களை சென்றடைய சமூக வலைதளங்களை பயன்படுத்துங்கள்: தேஜ கூட்டணி எம்பிகளுக்கு பிரதமர் அறிவுறுத்தல்

புதுடில்லி: டிச.13-

பொதுமக்களை சென்றடைய சமூக வலைதளங்களை பயன்படுத்துமாறு தேசிய ஜனநாயக கூட்டணி எம்பிக்களை பிரதமர் மோடி அறிவுறுத்தி உள்ளார்.

பார்லி. கூட்டத்தொடர் நடைபெற்று வரும் சூழலில், தினமும் ஒவ்வொரு மாநில தேசிய ஜனநாயக கூட்டணி எம்பிக்களை பிரதமர் மோடி சந்தித்து வருகிறார். அந்த வகையில், உத்தரபிரதேசத்தை சேர்ந்த தேசிய ஜனநாயக கூட்டணியின் எம்பிக்களை டில்லியில் பிரதமர் மோடி சந்தித்தார்.

இந்த கூட்டத்தில் அவர்களிடம் பேசிய அவர், எம்பிக்கள் திறம்பட பணியாற்ற வேண்டும், மக்கள் எளிதில் தொடர்பு கொள்ளும் வகையில் இருக்க வேண்டும் என்று கூறினார். மேலும், அரசின் வளர்ச்சிப்பணிகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், சமூக வலைதளங்களை அதிகம் பயன்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

## வரும் டிச.15ம் தேதி தமிழ்நாடு வருகிறார் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா

சென்னை, டிச.13-



ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா வரும் டிச.15ம் தேதி தமிழ்நாடு வருகிறார். தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் அடுத்தாண்டு ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ளது. இந்த தேர்தலுக்கு ஒவ்வொரு கட்சிகளும் ஆயத்தமாகி வருகின்றன. தற்போதைய நிலையில் நான்குமுனை போட்டி இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திமுக தலைமையில் காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், கம்யூனிஸ்டுகள் மதிமுக உள்ளிட்ட கட்சிகள் இடம் பெற்று உள்ளன. அதிமுக கூட்டணியில் பா.ஜனதா உள்ளது. இது தவிர விஜய்யின், தவெக தலைமையில் ஒரு அணியும், நாம் தமிழர் கட்சி தனி அணியாகவும் போட்டியிட உள்ளன.

பாட்டாளி மக்கள் கட்சியும், தேமுதிக மற்றும் டிடிவி தினகரனின் அமமுகவும் தங்கள் நிலையை இன்னும் அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை. இந்த கூட்டணி நிலைப்பாடு மாறுதலுக்கு உட்பட்டது. எந்த கட்சி, யாருடன் கூட்டணி சேருவார்கள் என்பதை பொறுத்து இருந்து தான் பார்க்க முடியும். அதிமுக தனது கூட்டணிக்குள் பாமக மற்றும் தேமுதிகவை கொண்டு வர விருப்பப்படுகிறது. அதற்கான மறைமுக பேச்சுவார்த்தை நடக்கிறது. அதேவேளையில், இப்போது கூட்டணியில் உள்ள பா.ஜனதாவுக்கு எத்தனை சீட்டுகள் வழங்கப்படும் என்ற எதிர்பார்ப்பும் அந்த கட்சியினர் இடையே ஏற்பட்டு உள்ளது.

இந்நிலையில், ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா வரும் டிச.15ம் தேதி தமிழ்நாடு வருகிறார். டெல்லியில் இருந்து விமானம் மூலம் சென்னை வரும் அமித்ஷா, சென்னை, வேலூரில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். மேலும் கூட்டணி விவகாரம், தேர்தல் பணிகள் குறித்து பாஜக மாநில நிர்வாகிகளுடன் அமித்ஷா ஆலோசனை நடத்த உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதற்கிடையில் பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் நாளை டெல்லி சென்று அமித்ஷாவை சந்திக்க உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சதுப்பு நிலங்களை அளவிடும் பணி நிறைவு; தமிழக அரசு தகவல்

சென்னை, டிச.13-



மாநிலம் முழுதும் உள்ள சதுப்பு நிலங்களை, செயற்கைக்கோள் தவியுடன் துல்லியமாக அளவிடும் பணிகள் நிறைவு பெற்று விட்டதாக, சென்னை உயர் நீதிமன்றத்தில், தமிழக அரசு தெரிவித்துள்ளது.

'ராம்சார்' தலமாக அங்கீகரிக்கப்பட்ட, சென்னை பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில், விதிகளை மீறி பன்னடுக்கு குடியிருப்புகள் கட்ட, 'பிரிகேட்' என்ற தனியார் நிறுவனத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது.

அதை ரத்து செய்ய கோரி, அ.தி.மு.க., சென்னை புறநகர் வழக்கறிஞர் பிரிவு மாவட்ட செயலர் பிரெஷ்நேவ் என்பவர் மனு தாக்கல் செய்தார்.

இந்த வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், 'உச்ச நீதிமன்ற உத்தரவுபடி, சதுப்பு நிலத்தின் எல்லையை துல்லியமாக, செயற்கைக்கோள் உதவியுடன் அளவிடும் பணியை விரைவுபடுத்த வேண்டும்.

'அதுவரை, சம்பந்தப்பட்ட சதுப்பு நில பகுதியில், தனியார் கட்டுமான நிறுவனம் எந்த பணிகளையும் மேற்கொள்ளக் கூடாது' என, இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டது.

இந்த மனு, தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவஸ்தவா, நீதிபதி ஜி. அருள்முருகன் அடங்கிய அமர்வு முன், நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது, தமிழக அரசு தரப்பில் அட்வகேட் ஜெனரல் பி.எஸ்.ராமன் ஆஜராகி, ''உச்ச நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில், பள்ளிக்கரணை உள்ளிட்ட சதுப்பு நிலங்களை, செயற்கைக்கோள் உதவியுடன் துல்லியமாக அளவீடு செய்யும் பணிகள் நிறைவு பெற்று விட்டன.

''இது சம்பந்தமான அறிக்கை, உறுதி செய்வதற்காக, மாவட்ட கலெக்டர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது. அவர்களின் அறிக்கையை பெற்ற பின், உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்,'' என்றார்.

இதை ஏற்ற நீதிபதிகள், வழக்கின் விசாரணையை ஜனவரி 4வது வாரத்துக்கு தள்ளிவைத்தனர்.

## அதிகரட்டி சுற்றுப்புற பகுதிகளில் ஒற்றை யானை நடமாட்டம்: வனத்துறை கண்காணிப்பு

மஞ்சூர், டிச.13-

அதிகரட்டி சுற்றுபுற பகுதிகளில் ஒற்றை காட்டு யானை நடமாடுவதால் வனத்துறையினர் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். நீலகிரி மாவட்டம் குந்தா வனச்சரகம் அதிகரட்டி பிரிவுக்குட்பட்ட பரஞ்சோதி காப்புகாடு தரிகெடா பகுதியில் கடந்த சில தினங்களாக ஒற்றை காட்டுயானை முகாமிட்டுள்ளது.



இந்த யானை பரஞ்சோதி, கிளிஞ்சாடா, கக்காச்சி, கெந்தளா, மகாராஜா, சன்னிசைடு, கோடேரி, குன்னக்கொம்பை, அல்லாடா, கிரேக்மோர் எஸ்டேட், சட்டன் எஸ்டேட் ஆகிய பகுதிகளில் சுற்றி வருவதுடன் இப்பகுதிகளில் உள்ள விவசாய விளை நிலங்களில் புகுந்து பயிர்செடிகளை நாசம் செய்து வருகிறது.

மேலும், பகல் நேரங்களில் தேயிலை தோட்டங்களில் உலா வருவதால் தோட்டப்பணிகளுக்கு செல்லும் தொழிலாளர்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது. பொதுமக்கள் வசிக்கும் குடியிருப்புகளுக்கு அருகே நடமாடுவதால் இதையடுத்து பொதுமக்களும் பீதி அடைந்துள்ளனர்.


இதையடுத்து குந்தா ரேஞ்சர் செல்வகுமார் மேற்பார்வையில் வனத்துறையினர் காட்டு யானை நடமாட்டம் உள்ள இடங்களை கண்காணித்து வருவதுடன் குடியிருப்பு பகுதிகளுக்குள் யானை நுழையாமல் இருக்க தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும், ஒற்றை காட்டு யானை நடமாட்டம் காரணமாக மேற்படி பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் இரவு நேரங்களில் தேவையில்லாமல் வெளியில் நடமாடுவதை தவிர்க்க வேண்டும். தேயிலை மற்றும் தோட்டப்பணிகளுக்கு செல்பவர்கள் பாதுகாப்புடன் செல்ல வேண்டும் என எச்சரித்துள்ளனர்.

## ஊட்டியில் உறைப்பனி துவங்காததால் குயின் ஆப் சைனா மலர் பூப்பதில் தாமதம்

ஊட்டி, டிச.13-

ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் குயின் ஆப் சைனா என அழைக்கப்படும் பவுலோனியா பார்சினி மலர் மரங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஆண்டு தோறும் டிசம்பர் மாதத்தில் இந்த மரத்தில் மலர்கள் பூத்துவிடும். வெண்மை கலந்த இளஞ்சிவப்பு நிறத்தில் மரம் முழுவதும் பூத்து காணப்படும்.



இதனை சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்து செல்வது வழக்கம். ஆனால், இம்முறை கடந்த ஜூன் மாதம் துவங்கிய மழை இதுவரை விட்டபாடில்லை. கடந்த சில மாதங்களாக மேக மூட்டம் மற்றும் சாரல் மழை பெய்து வந்தது.

இதனால் இதுவரை ஊட்டியில் உறை பனி விழாமல் உள்ளது. வழக்கமாக பனிக்காலம் துவங்கினால் டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் புவுலோனியா பார்சினி மலர்கள் பூத்துவிடும். ஆனால், மழை காரணமாக இம்முறை இதுவரை பூக்காமல் உள்ளது. இதனால், தாவரவியல் பூங்கா வரும் சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.



## சோழவந்தானில் திமுக சார்பில் நலத்திட்ட உதவிகளை சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் வழங்கினார்

சோழவந்தான்.டிச.13.
மதுரை மாவட்டம் சோழவந்தான்அருகே தென்கரை,
முள்ளிபள்ளம், ஊத்துக்குழி, ஆகிய கிராமங்களுக்கு திமுக சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது இதில் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், கலந்து கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். தொடர்ந்து பேசியது அவர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் திராவிட மாடல் ஆட்சியில் எண்ணற்ற திட்டங்களை தமிழக முதல்வர் வழங்கிக் கொண்டுள்ளார் குறிப்பாக சோழவந்தான் தொகுதிக்கு கட்டிடங்கள் பாலங்கள் தார்சாலைகள் கிராமங்கள்தோறும் குடிநீர்வசதி, உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளது என்று கூறினார். இதில் தேர்தல் பொறுப்பாளர் சம்பத், ஊராட்சி நிர்வாகிகள் முள்ளிபள்ளம்கேபிள் ராஜா,ஊத்துக்குளி ராஜா சோழவந்தான் பேரூராட்சி தலைவர் ஜெயராமன், பேரூர்நகரச் செயலாளர்
சத்தியபிரகாஷ்,மற்றும் பெரியசாமி, தவமணி, உள்பட பலர்கலந்து கொண்டனர்.




■ திருப்பூர், மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட வாலிபாளையம் பகுதி கழகம் 34வது வார்டு சார்பாக ஊத்துக்குளி சாலை பகுதியில் உள்ள தனியார் மண்டபத்தில் பாகம் எண் : 41, 43 க்கான வாக்குச்சாவடி முகவர்களுக்கான ஆலோசனை கூட்டம் பகுதிச் செயலாளர் பி. ஆர். செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது. அதில் 'என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி' முதல்நாள் தொடக்க நிகழ்ச்சியில் திருப்பூர் திமுக மத்திய மாவட்ட செயலாளர் க. செல்வராஜ் கலந்து கொண்டு வாக்கு சாவடி முகவர்களுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். கூட்டத்திற்கு கூட்டத்திற்குதிமுக தெற்கு மாநகர செயலாளர் டி.கே. டி. நாகராசன், வார்டு செயலாளர் இளங்கோ முன்னிலை வகித்தனர். உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் ஏராளமான கலந்து கொண்டனர்.



## தி.மு.க. அரசை கண்டித்து தேங்காய் உடைப்பு திருப்பரங்குன்றம் தீபத்தூண் விவகாரத்தால் தேனியில் விஷ்வ ஹிந்து பரிஷத் போராட்டத்தால் பரபரப்பு

தேனி. டிச.13
தேனி தீயணைப்பு நிலையம் அருகே வேல்முருகன் திருக்கோவில் அமைந்துள்ளது இந்த திருக்கோவிலில் விஷ்வ ஹிந்து பரிஷத் சார்பில் சிறப்பு பூஜைகள் சிறப்பு ஆராதனைகள் நடைபெற்றன. தொடர்ந்து திருப்பரங்குன்றத்தில் கார்த்திகை தீபம் ஏற்றுவது சம்பந்தமாக திமுக அரசு எதிராக செயல்படுவதாக கூறி விஷ்வ ஹிந்து பரிஷத் சார்பில் தேங்காய் உடைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். நகரத் தலைவர் ராஜ்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் நகர செயலாளர் பால நடராஜன், மாவட்டத் துணைத் தலைவர் ஹரி மாவட்ட இணை செயலாளர் ஜெயபிரகாஷ், ஒன்றிய பொறுப்பாளர் சிவயோகி , பிரபு, சிவானந்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.மேலும் இந்த நிகழ்வில் விஸ்வ ஹிந்து பரிஷத் தேனி மாவட்ட நிர்வாகிகள் பொதுமக்கள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.



■ தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அனைத்து சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் முக்கிய கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னையில் நடைபெற உள்ள கவன ஈர்ப்பு பேரணியின் துண்டு பிரசுரத்தை உதவி இயக்குனர் தணிக்கை அண்ணாத்துரை அவர்களிடம் வழங்கப்பட்டது. அப்போது மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள் அணைக்கரைப்பட்டி பொட்டு முருகேசன், குள்ளப்புரம் முத்து செல்வன் கொடுவிலார்பட்டி வேல்முருகன் எருமலை பாண்டியராஜன், கண்டமனூர் ராஜா, கடமலைமயிலை துரைப் பாண்டி முதலக்கம்பட்டி வீர புத்திரன், ஊஞ்சாம்பட்டி பாலச்சந்தர், கோபால், வெங்கடேசன் மற்றும் பலர் உடனிருந்தனர்.

## ரஜினி பிறந்த நாளை முன்னிட்டு நீண்ட ஆயுளுடன் வாழவும்: கிணற்றுத் தண்ணீரில் யோகாசனம் செய்த ரஜினி ரசிகர்

தேனி. டிச.13
தேனி மாவட்டம் தேவாரத்தைச் சேர்ந்தவர் தளபதி விஜயன் என்பவர். இவர் தீவிர ரஜினி ரசிகர் ஆவார். சுமார் கடந்த 15 ஆண்டுகளாக ரஜினியின் பிறந்த நாளை முன்னிட்டு அன்னதானம் செய்தல், நலத்திட்ட உதவி வழங்கல் போன்றவை செய்து வருகிறார்.
இந்த ஆண்டு சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, ரஜினிகாந்த் அவர்கள் நீண்ட நாள்



வாழவும், உலக அமைதிக்காகவும், ஐயப்பன் கோவிலுக்கு சென்று வரும் பக்தர்கள் பாதுகாப்பான முறையில் சென்று வரவும் எனக் கூறி தேனி மாவட்டம் சின்னமனூர் பகுதியில் தோட்டத்தில் உள்ள கிணற்றில் சுமார் 2 மணி நேரத்திற்கு மேலாக கிணற்றுத் தண்ணீரில் யோகாசனம் செய்தார்.
தண்ணீரில் மிதந்தபடியே யோகாசனம் செய்துகொண்டு, ரஜினி அவர்கள் நூறாண்டுக்கு மேல் வாழ கடவுளை வேண்டி பிரார்த்தனை செய்தார்.

## பாகிஸ்தானில் இருந்து புலம்பெயர்ந்த 195 பேருக்கு கிடைத்தது இந்திய குடியுரிமை

ஆமதாபாத்: டிச.13-
பாகிஸ்தானில் இருந்து அகதிகளாக நம் நாட்டிற்குள் வந்த 195 பேருக்கு இந்திய குடியுரிமைக்கான சான்றிதழை குஜராத் துணை முதல்வர் ஹர்ஷ் சங்வி வழங்கினார்.
ஆமதாபாத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பாகிஸ்தானில் இருந்து வந்த புலம்பெயர்ந்தோர் 195 பேருக்கு இந்திய குடியுரிமை சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. குடியுரிமை பெற்றவர்கள், ஹிந்து, சீக்கிய, பவுத்த மற்றும் சமண சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.
நிகழ்ச்சியில் பேசிய குஜராத் துணை முதல்வர் ஹர்ஷ் சங்வி, 'புன்னகையோடு வாழுங்கள். இனி நீங்கள் இந்திய குடிமக்கள். இந்தியாவில் தஞ்சம் அடைந்தவர்கள், முந்தைய அரசுகளின் (காங்கிரஸ்) புறக்கணிப்பால், இந்தியாவில் அகதிகளாக வாழ்ந்து வந்தனர். பிரதமர் மோடியின் தலைமையிலான அரசு, 1947 மற்றும் 1956க்குப் பிறகு இந்தியாவுக்கு வந்தவர்களுக்கு சிஏஏ சட்டத்தைக் கொண்டு வந்து, அகதிகளாக வாழ்ந்து வந்தவர்களின் நீண்ட கால கனவான இந்திய குடியுரிமையை பெற வழிவகை செய்தது,' எனக் கூறினார்.
குடியுரிமை பெற்ற 195 பேரில் 122 பேர் சிஏஏ சட்டத்தின் கீழ் குடியுரிமை பெற்றனர். மீதமுள்ள 73 பேர் ஆமதாபாத் கலெக்டர் அலுவலகத்தில் விண்ணப்பித்ததன் அடிப்படையில் குடியுரிமை சான்றிதழ்களைப் பெற்றனர்.
குடியுரிமை திருத்தச் சட்டம்
கடந்த 2019ம் ஆண்டு பார்லியில் நிறைவேற்றப்பட்ட குடியுரிமை திருத்தச் சட்டம், 2024ம் ஆண்டு மார்ச் 11ம் தேதி முதல் நடைமுறைக்கு வந்தது. பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வங்கதேசம் ஆகிய நாடுகளிலிருந்து இந்தியாவில் குடியேறிய முஸ்லிம் அல்லாத மதப் பிரிவினருக்குக் குடியுரிமை வழங்குவதற்கு வழிவகை செய்கிறது. 2014, டிசம்பர் 31ம் தேதிக்குள் இந்தியாவுக்கு வந்த ஹிந்துக்கள், சீக்கியர்கள், சமணர்கள், பவுத்தர்கள், பார்சிக்கள், கிறிஸ்தவர்கள் ஆகியோருக்கு இந்திய குடியுரிமை வழங்கப்படும்.

## கரூர் நெரிசல் சம்பவ வழக்கு; ஐகோர்ட் பதிவாளர் அறிக்கை தர சுப்ரீம் கோர்ட் ஆணை

கரூர், டிச.13-
கரூரில் தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் நடத்திய கூட்டத்தில், நெரிசல் ஏற்பட்டு, 41 பேர் உயிரிழந்தனர். இந்த வழக்கை தமிழக போலீசார் விசாரித்து வந்த நிலையில், மாநில அரசு சார்பில் சிறப்பு புலனாய்வு குழுவும் அமைக்கப்பட்டது. வழக்கை சிபிஐக்கு மாற்ற வலியுறுத்தி சுப்ரீம் கோர்ட்டில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. சுப்ரீம்கோர்ட், விசாரணையை சிபிஐக்கு மாற்றி உத்தரவிட்டது. கரூர் நெரிசல் வழக்கு சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் கே.கே.மகேஸ்வரி மற்றும் விஜய் பிஷ்னோய் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசு தரப்பில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், ''தனி நீதிபதி ஆணையத்துக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும்.
எதிர்காலத்தில் கூட்டங்களை நடத்துவதற்கான வழிமுறைகளை வகுக்கவே ஆணையம் அமைக்கப்பட்டது'' என வாதங்களை முன்வைத்தார்.
வாதங்களை கேட்ட சுப்ரீம் கோர்ட் நீதிபதி மகேஸ்வரி, ''சென்னை ஐகோர்ட் விசாரணையில் தவறு உள்ளதாக கருதுகிறோம். ஐகோர்ட் பதிவாளர் அறிக்கை தர வேண்டும்,'' என உத்தரவிட்டார். பின்னர் வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

## சேலத்தில் பொது விநியோகத்திட்ட குறைதீர் முகாம் !

சேலம், டிச.13-
சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் வருகின்ற 13.12.2025 அன்று பொது விநியோகத் திட்டம் தொடர்பான குறைதீர் முகாம் நடைபெறவுள்ளது...
இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்,பிருந்தாதேவி,தெரிவித்துள்ளதாவது ;
சேலம் மாவட்டத்தில் பொது விநியோகத் திட்டத்தின் சேவைகளை அனைத்துத் தரப்பு மக்கள் பயன்பெறும் பொருட்டு, ஒவ்வொரு மாதமும் இரண்டாவது




சனிக்கிழமையன்று அனைத்து வட்டங்களிலும் பொது விநியோகத்திட்ட மக்கள் குறைதீர் முகாம் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, டிசம்பர் மாதத்திற்கு வருகின்ற 13.12.2025, சனிக்கிழமை அன்று ஒவ்வொரு வட்டாட்சியர் அலுவலகத்திலும் நடைபெறும் பொது விநியோகத்திட்ட குறைதீர் முகாமில் பொதுமக்கள் பொது விநியோகத்திட்டம் தொடர்பான தங்களது குறைகளை வட்ட வழங்கல் அலுவலரிடம் நேரில் தெரிவித்து தீர்வு செய்து கொள்ளலாம்.
இக்குறைதீர் முகாமில், குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம், முகவரி மாற்றம் மற்றும் புதிய குடும்ப அட்டை நகல் அட்டை கோரும் மனுக்கள் பெற்று உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



■ திருப்பூர் தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட குடிமங்கலம் மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பண்ணை கிணறு கோழிக்குட்டை ஆகிய பகுதிகளில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி குடிமங்கலம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் அடிவள்ளி முரளி அவர்கள் தலைமையில் பி.எல்.சி, பி.எல்2 கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள் லோகநாயகி, நித்தியானந்தம், முருகானந்தம், சுரேஷ், குமாரசாமி, கௌதம், கார்த்தி, பிரகாஷ், பொன்வேல் மற்றும் பண்ணை கிணறு ஊராட்சி கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். இக்கூட்டத்தில் ஒன்றிய கழக செயலாளர் அவர்கள் பேசும் போது கழக அரசின் சாதனைகளை விளக்கி பூத் வாரியாக வீடுவீடாக சென்று சாதனை புத்தகங்களை வழங்கிட வேண்டும் என்று தெருமுனைப்பிரச்சாரங்கள் கழக அரசின் சாதனைகளை விளக்கி பொது மக்களுடன் இணைந்து பிரச்சாரம் செய்ய வேண்டும். மீண்டும் தளபதியார் தலைமையில் கழக ஆட்சி அமையும் என சூழ் உரைத்தார்.

## மக்கள்தொகை கணக்கெடுப்புக்கு ரூ.11,718 கோடி ஒதுக்கீடு: மத்திய அமைச்சரவை ஒப்புதல்

புதுடில்லி: டிச.13-
மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு ரூ.11,718 கோடி ஒதுக்குவதற்கு என மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
டில்லியில் பிரதமர் மோடி தலைமையில் மத்திய அமைச்சரவை கூட்டம் நடந்தது. இந்தக் கூட்டத்துக்கு பிறகு நிருபர்களை சந்தித்த மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறியதாவது: 2027 ம் ஆண்டு நடக்கும் மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு ரூ.11,718 கோடி ஒதுக்கீடு செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
இந்த மக்கள்தொகை கணக்கெடுப்பானது, முதல்முறையாக டிஜிட்டல் முறையில் நடக்கிறது. தரவுகளை பாதுகாப்பாக வைக்கும் வகையில் டிஜிட்டல் முறைகள் வடிவமைக்கப்பட்டுள்ளது. இரண்டு கட்டங்களாக மக்கள்தொகை கணக்கெடுப்பு நடக்க உள்ளது.
முதல் கட்டமாக 2026 ஏப்., முதல் செப்டம்பர் வரையிலும்
இரண்டாம் கட்டமாக 2027 பிப்ரவரியிலும் நடைபெறும். இவ்வாறு அவர் கூறினார்.

## 18 ஆண்டுகளுக்கு பிறகு ... அடையாறில் இருந்து மாமல்லபுரம் வரை மின்சார டபுள் டக்கர் பேருந்துக்கான சோதனை ஓட்டம்!

சென்னை, டிச.13-
சென்னை அடையாறில் இருந்து மாமல்லபுரம் வரை டபுள் டெக்கர் பேருந்துக்கான சோதனை ஓட்டம் நடைபெற்றது. சென்னையில் 1970களில் இரட்டை அடுக்கு கொண்ட டபுள் டக்கர் என அழைக்கப்படும் பேருந்துகள் முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்டு இயக்கப்பட்டன. 10 ஆண்டுகள் இந்த பேருந்துகள் சென்னையில் மக்கள் பயன்பாட்டிற்கான தனது சேவையை வழங்கியது. அதன்பிறகு 1980களில் இந்த பேருந்துகள் நிறுத்தப்பட்டன. பின்னர் 1997ம் ஆண்டில் இரட்டை அடுக்கு பேருந்துகள் மீண்டும் சென்னையில் ஓடத் தொடங்கின. சுமார் 10 ஆண்டுகளுக்கு மேல் அவை பயணிகளை ஏற்றிச் சென்றன. கடைசியாக உயர் நீதிமன்றம் தாம்பரம் இடையேயான வழித்தடத்தில் இந்த பேருந்துகள் இயக்கப்பட்டன. கடந்த 2008ம் ஆண்டு இறுதியாக




சென்னை மாநகரில் இயக்கப்பட்டு அத்துடன் நிறுத்தப்பட்டன.
அதன்பிறகு இதுவரை சென்னையில் டபுள் டக்கர் பேருந்துகள் இயக்கப்படவில்லை. இந்நிலையில் மீண்டும் இந்த இரட்டை அடுக்கு கொண்ட பேருந்துகள் இயக்கப்படும் என தமிழக போக்குவரத்து துறை சார்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, முதல் கட்டமாக 20 மின்சார டபுள் டக்கர் பேருந்துகளை வாங்க திட்டமிடப்பட்டன. குறிப்பாக, வார இறுதி நாட்கள், சுற்றுலா தலங்களுக்கு செல்லும் வழித்தடம், பயணிகளுக்கு தேவையாக உள்ள அதிகம் பயன்படுத்தும் வழித்தடம் உள்ளிட்டவைகளில் இயக்க முடிவெடுக்கப்பட்டது.
முதற்கட்டமாக அடையாறில் இருந்து மாமல்லபுரம் வரை டபுள் டெக்கர் பேருந்து சேவை அறிமுகம் செய்யப்பட உள்ளது. இதற்கான சோதனை ஓட்டம் தொடங்கி உள்ளது. சென்னை மாநகர போக்குவரத்து கழகம் சார்பில் சிவப்பு நிறம் கொண்ட டபுள் டெக்கர் பேருந்து, அடையாறில் இருந்து, மாமல்லபுரம் வரை கிழக்கு கடற்கரை சாலை வழியாக இயக்கப்பட்டு சோதனை ஓட்டம் நடைபெற்றது. சாதாரண அரசு பேருந்துகளில் 60 பேர் மட்டுமே பயணிக்கும் நிலையில் டபுள் டெக்கர் பேருந்தில் 90 பேர் பயணிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.குறிப்பாக சுமார் 18 ஆண்டுகளுக்கு பிறகு வரும் ஜனவரி மாதம் முதல் சென்னையில் டபுள் டெக்கர் பேருந்து இயக்கப்படவுள்ள நிலையில் சோதனை ஓட்டம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000